## பத்திரிக்கை செய்தி

### கரூர் மாவட்டம் குளித்தலை வட்டம் பொய்யாமணியில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப.,அவர்கள் ஆய்வு செய்து மழலையர் வகுப்புகளை பார்வையிட்டார்

அதன் விவரம் வருமாறு

கரூர் மாவட்டம் குளித்தலை வட்டம் பொய்யாமணி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மற்றும் திருச்சாப்பூர் அரசு நடுநிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப.,அவர்கள் இன்று (06.06.2019) பார்வையிட பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இதில், பொய்யாமணி ஊரட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தன்னார்வலர்கள், முன்னார் மாணவர்கள், ஊர்பொதுமக்களின் பங்களிப்போடு மாணவ-மாணவிகளுக்கு ஸ்மார்ட் வகுப்பறைகள், குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள், பேவர் பிளாக் தளங்களுடன் கூடிய வளாகங்கள், நூலகம் என பல்வேறு வசதிகள் செய்யப்பட்டிருப்பதை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அப்பள்ளிக்கு நிதியுதவி வழங்கிவரும் அனைவரையும் பாராட்டினார். பின்னர் பொய்யாமணி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தொடங்கப்பட்டுள்ள மழலையர் வகுப்புகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டார். பள்ளி குழந்தைகளுடன் கலந்துரையாடிய மாவட்ட ஆட்சியர் அவர்கள், “உங்கள் வாழ்வில் இனிய தொடக்கமாக இந்தப் பள்ளிகாலம் அமையும். நாளை நமதே! நாளும் நமதே! என்ற வார்த்தைகளை உங்கள் மனதில் பதித்து தன்னம்பிக்கையுடன் படித்து வாழ்வில் வெற்றிபெற வேண்டும் என்று வாழ்த்தினார்.

அதனைத்தொடர்ந்து திருச்சாப்பூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியிலும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப, அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த நிகழ்வின்போது குளித்தலை வருவாய் கோட்டாட்சியர் திரு.லியாகத், வட்டாரக் கல்வி அலுவலர் திருமதி.ராஜலட்சுமி, தலைமை ஆசிரியர்கள் திருமதி. முத்துலட்சுமி(பொய்யாமணி), திரு.துரை(திருச்சாப்பூர்) உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.